# புதுவை காவல்துறை

## பத்திரிகை செய்தி

கடந்த 29.08.2011 அன்று 01.30 மணிக்கு செல்வம்(30) த/பெ சங்கர், நெ.21/174.ஏரிகரை வீதி, துலுக்கானத்தம்மன் நகர், முருங்கப்பாக்கம், புதுச்சேரி என்பவர் முதலியார்பேட்டை காவல் நிலையத்தில், கடந்த 28.08.2011 அன்று, இரவு சுமார் 12.30 மணியளவில், துலுக்கனத்தம்மன் நகரில் அவர் வீட்டின் அருகில் குடியிருந்து வந்த திரு நீலகண்டன், வயது 28 மற்றும் அவரது மனவி டெக்கோரா மேரி, வயது 27 ஆகிய இருவரையும், சுமார் 25 வ்யது மதிக்கதக்க இரண்டு ஆண் நபர்கள் முகத்தை துணியால் மூடிவந்து, மேற்படி திரு நீலகண்டனின் வீட்டினுள் புகுந்து கத்தியால் பாலமாகா வெட்டியும், குத்தியும் கொலை செய்துவிட்டு, சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் பார்க்கவும், அவர்கள் இருவரும் ஓடிவிட்டார்கள் என புகார் அளித்தார். அந்த புகாரின் அடிப்படையில், முதலியார்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.199/2011 U/s 448,302 IPC r/w 34 IPC -ல் வழகு பதிவு செய்யப்பட்டு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கின் மேல் விசாரணையில், இன்று 04.09.2011 முதலியார்பேட்டை போலீஸார் குற்றவாளிகள் 1)வேல்முத்து (23) த/பெ ராமசாமி, நெ.16. 4-வது குறுக்கு தெரு, அனிதா நகர், முதலியார்பேட்டை, 2) அன்பு @ கதிர்வேல்(20) த/பெ தனபால், நெ.24.காந்தி வீதி, இந்திரா நகர், முதலியார்பேட்டை மற்றும் 3)பிரதீஷ் (20) த/பெ ஆறுமுகம், நெ.15.பால்வடி தெரு, பாகூர் பேட் ஆகியோரை கைது செய்து அவர்களது ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. அதில் அவர்கள் மூவரும் சேர்ந்து, மேற்படி திரு நீலகண்டனையும், தெக்கோரா மேரியையும், குற்றவாளி வேல்முத்துக்கும் இறந்த திருநீலகண்டனுக்கும் உள்ள முன் விரோதம் காரணமாகவும் மற்றும் திருநீலகண்டனுக்கும் அவரது அண்ணன் மனிகண்டனன் (31) த/பெ நாகப்பன் (எ) வடிவேலு, தியாகு முதலியார் நகர் ஹௌசிங் போர்டு, முதலியார்பேட்டை என்பவருக்கும் இடையில் இருந்த பாகப்பிரிவினை முன்விரோதம் காரணமாக, மணிகண்டனின் தூண்டுதலின்படியும் கத்தியால் வெட்டியும், குத்தியும் கொலை செய்தனர் என வாக்குமூலம் அளித்தனர். அவர்களின் வாக்குமூலத்தின் பேரில், அவர்கள் மேற்படி கொலை செய்ய பயன்படுத்தப்பட்ட கத்திகளை பறிமுதல் செய்யப்பட்டது. அதன் பேரில், இறந்த திருநீலகண்டனின் அண்ணன் மனிகண்டன் என்பவரும் கைது செய்யப்பட்டு அவரது ஒப்புதல் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் நால்வரும் நீதிமன்ற காவலுக்காக இன்று 04.09.2011 கனம் நீதிமன்றம் முன்பு ஆஜர் செய்யப்படுவார்கள்.